01 570

**சுருக்கம்**

பணியாளர் தொகுதி – ஆதிதிராவிடர் நலம் – ஆதி திராவிடர் நல ஆணையரகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து காலஞ்சென்ற திரு. S.தியாகராஜன் என்பவரின் மகன் திரு T. சந்திரன் என்பவர் கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணியில் சேர்ந்த நாளான 20.09.2018 முதல் பணி வரன்முறை செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந1)துறை</u>**

அரசாணை (ப) எண்.88

நாள் : 06.05.2021
பிலவ வருடம்
சித்திரை 23 ஆம் நாள்.
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண். 100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத்துறை, நாள். 01.08.2018.
2. ஆதி திராவிடர் நல ஆணையரின் கடிதம் எண். ந.க.எண்.இ3/24728/2015, நாள். 08.01.2021
3. அரசாணை (நிலை) எண். 18, தொ (ப) வே.வா.துறை, நாள். 23.01.2020

------

**<u>ஆணை:</u>**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஆதி திராவிடர் நல ஆணையரின் கடிதத்தில், பணியில் இருக்கும்போது பணியிடை காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டத்தின்படி, ஆதி திராவிடர் நல ஆணையரகத்தில் உதவியாளராகப் பணியில் இருக்கும்போது 14.08.2014 அன்று காலமான திரு. S.தியாகராஜன் என்பவரின் மகன் திரு T. சந்திரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் ஆதிதிராவிடர் நல ஆணையரகத்தில் தமிழ்நாடு மாநில சார்நிலைப் பணிவிதிகளுக்கான பொது விதிகளின் விதி 10 (அ) (i) [தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் ( பணி நிபந்தனைகள் ) சட்டம், 2016 (தமிழ்நாடு சட்டம் எண்.14/2016]–இன் பிரிவு 47(1) ]–இன் கீழ் தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, 20.09.2018 முற்பகல் முதல் பணி புரிந்து வருகிறார்.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி தனியர் கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார். காலஞ்சென்ற அரசு ஊழியரின் மகன் திரு T. சந்திரன் என வட்டாட்சியர் சான்று வழங்கியுள்ளார் என்றும், தனியரது குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை / காலமான அரசு

ஊழியரின் குடும்பத்தினரின் பெயரில் அசையும் சொத்துக்கள் ஏதுமில்லை அசையா சொத்துக்களான ரூ.11,00,000/– (ரூபாய் பதினொரு இலட்சம்) மதிப்புடைய RCC மெத்தை வீடு மட்டுமே உள்ளது என்றும், இறந்தவரின் குடும்பத்திற்கு குடும்ப நல ஓய்வூதியமாக ஆண்டுக்கு ரூ.1,75,320/– மட்டும் (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்தைந்து ஆயிரத்து முன்னூற்றி இருபது மட்டும்) பெறப்பட்டு வருகிறது என்றும், இக்குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், காலஞ்சென்ற அரசு ஊழியரின் மனைவி திருமதி. சாந்தி, மறுமணம் ஏதும் செய்து கொள்ளவில்லை என்றும் ஆணை வட்டாட்சியர் சான்று வழங்கியுள்ளார். மேற்படி தனியர் பணிநியமனம் கேட்டு விண்ணப்பித்த நாளன்று பள்ளி இடைநிலைக் கல்வி பொதுத்தேர்வில் தேர்ச்சி மற்றும் தமிழ் தட்டச்சுத் தேர்வில் இளநிலையும், ஆங்கிலம் தட்டச்சுத் தேர்வில் உயர்நிலையில் தேர்ச்சி பெற்றுள்ளார். மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி கருணை அடிப்படை பணி நியமனத்திற்கு ஆணையுற்று நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார். எனவே, தனியரது தட்டச்சர் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 20.09.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பிக்குமாறு ஆதி திராவிடர் நல ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, திரு T. சந்திரன் என்பவரின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெறும் நிலை எழவில்லை.

4. இந்நிலையில், ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை ஏற்று, ஆதி திராவிடர் நல ஆணையரகத்தில் உதவியாளராகப் பணியில் இருக்கும்போது 14.08.2014 அன்று பணியிலை காலமான திரு. S.தியாகராஜன் என்பவரது மகன் திரு T.சந்திரன், என்பவருக்கு கருணை அடிப்படையில் ஆதிதிராவிடர் நல ஆணையரகத்தில் தட்டச்சராக பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் பணியில் சேர்ந்த நாளான 20.09.2018 முற்பகல் முதல் அவரது பணியை வரன்முறை செய்திட, அவர் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அரசு முடிவெடுத்து, அதன்படி அன்னாரது பணியினை 20.09.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தகுதியுள்ள ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதேனும் இருப்பின் அவைகளை விதிகளின்படி பெற தனியர் தகுதி உடையவராகிறார்.

5. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் இசைவினை அதன் அ.சா.எண்.4741/ட்டி1/2021, நாள்.12.03.2021–இல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஷம்பு கல்லோலிகர்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ)**

<u>பெறுநர்</u>

ஆணையர், ஆதிதிராவிடர் நலம் சென்னை – 600 005 .
திரு. T. சந்திரன், தட்டச்சர், ஆதிதிராவிடர் நல ஆணையரகம்,
சென்னை – 600 005.
(ஆதிதிராவிடர் நல ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 600 008 (கிழக்கு)
முதன்மை மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 600 006/18/35

**நகல்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல முதன்மைச் செயலாரின் (மு.கூ.பொ) நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை – 600 009.

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை – 600 009.

இருப்புக்கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

06/05/2024

பிரிவு அலுவலர்

 மே.கு.எண் அ6/24728/2015, நாள்: 07.2021.

சார்பு செய்யப்படுகிறது.

26/7/21

ஆதிதிராவிடர் நல ஆணையரின்
நேர்முக உதவியாளர்
சேப்பாக்கம், சென்னை–600 005

26/7/21

பெறுநர்:

திரு.ஏ. சந்திரன்,
தட்டச்சர்,
ஆதிந ஆணையரகம்,
சென்னை-5.